CONGRATULATIONS S.Aishwarya Lakshmi ,I B.Sc. Physics won the first prize in Talk your way to Japan Speech contest - 2018.She will be travelling to Japan as a culturtal Ambassador from 13th to 27th October 2018.






# பேச்சுப் போட்டியில் வெற்றி: ஜப்பான் செல்லும் மாணவர்கள்

**சென்னை, செப். 22:** சென்னையில் நடைபெற்ற கலாசார பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற தமிழக மாணவர்கள் நான்கு பேர் ஜப்பானுக்கு சுற்றுலா செல்ல தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தொழிற்பயிற்சிக்காக ஜப்பான் சென்று திரும்பியவர்களால் தொடங்கப்பட்ட ஏபிகே-ஏஓடிஎஸ் தமிழ்நாடு மையமானது, ஹியோஷி என்னும் ஜப்பான் நாட்டு நிறுவனத்துடன் இணைந்து தமிழகத்தில் ஆண்டுதோறும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் குறித்த பேச்சுப் போட்டியை நடத்தி வருகிறது.

நிகழாண்டுக்கான இறுதிப் போட்டி சென்னையில் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெற்ற முதல் மூன்று பேருக்கு பரிசு, சான்றிதழ்களை ஜப்பான் துணைத் தூதரக அதிகாரி கொஜீரோ உஸியாமா வழங்கினார்.

அரசு, தனியார் பள்ளி, கல்லூரி, ஜப்பான் கல்வி மையம் என நான்கு பிரிவுகளிலும் முதலிடத்தைப் பிடித்த நான்கு பேர் வரும் அக். 13-ஆம் தேதி முதல் அக்.26-ஆம் தேதி வரை ஜப்பானின் கலாசாரம், பண்பாடு, நாகரிகம் போன்றவற்றை அறிந்து கொள்வதற்காக அந்த நாட்டுக்கு இலவசமாக அழைத்துச் செல்லப்படுவர்.




ஜப்பானுக்குச் செல்லவுள்ள மாணவர்களுடன் (இடமிருந்து) ஏபிகே-ஏஓடிஎஸ் தமிழ்நாடு மையத்தின் நிறுவனர் எம்.ஆர்.ரங்கநாதன், ஜப்பான் துணைத் தூதர் கொஜிரோ உஸியாமா, மையத்தின் தலைவர் ஜி.சந்திரமோகன், துணைத் தலைவர் செல்லப்பா ஸ்ரீராம் உள்ளிட்டோர்.

**ஜப்பானுக்கு கல்விச் சுற்றுலா செல்லும் மாணவர்கள் விவரம்:**

**அரசுப் பள்ளி:** எஸ்.லோகேஸ்வரி, பிளஸ் 2, ஜெய்கோபால் கரோடியா அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, சூளைமேடு, சென்னை.

**தனியார் பள்ளி:** ஜெ.நாகேந்திரன், பிளஸ் 2, செயின்ட் மேரீஸ் மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல்.

**கல்லூரி:** யு.எஸ். அனந்திதா, கட்டடவியல் 5-ஆம் ஆண்டு, எம்.எஸ்.ஏ.ஜெ. கட்டடவியல் அகாதெமி, ஏகாத்தூர், சிறுசேரி.

**ஜப்பான் கல்வி மையம்:** எஸ். ஐஸ்வர்யா லட்சுமி, சென்னை.

இந்த நிகழ்ச்சியில் ஏபிகே-ஏடிஓடிஎஸ் மையத்தின் நிறுவனர் எம்.ஆர்.ரங்கநாதன், தலைவர் சந்திரமோகன், ஹியோசி இந்தியா நிறுவனத்தின் பொறுப்பாளர் எம்.மயில்சாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.


தினமணி Sun, 23 September 2018
epaper.dinamani.com/c/32453097